

# தமிழ்ச்சிட்டு

## சிறுவர் கலையிதழ்



### தனித்துப் பார்க்காதீர் !

தனித்துப் பார்க்காதீர்!-என்னைத்
தனித்துப் பார்க்காதீர்!-என்
இனத்தை நீக்கி,
'என்'னையும் 'என'த்தையும்
தனித்துப் பார்க்காதீர்!-இனியும்
தனித்துப் பார்க்காதீர்!

'என்' என்று சொன்னாலும்
எனக்குள்ளும் 'நீர்' தாம்!
'என' தென்று சொலும் சொல்லும்
இனங்காக்கும் 'நீர்' தான்!
'உன்' என்று சொன்னாலும்
உமக்குள்ளும் 'நான்' தான்!
உமதென்று சொலும் சொல்லும்
உரிமைக்குப் பூண் தான்!

—(தனித்துப்)

(தொடர்ச்சி: அடுத்த பக்கம்)

குரல்: 6
இசை: 12

விலை
25 காசு.

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

இனித்'தமிழ்' என்றாலும்
எனைத்தாங்கும் 'உயிர்'தான்!
என்'உடல்' 'பொருள்' யாவும்
என் இனப் பயிர் தான்!
தனித்தவன் ஆனாலும்
'தமிழ்' ஈன்ற சேய் நான்!
தாய் அவள் நமக்கெல்லாம்;
தமர் நீங்கள்! வாய் நான்! —(தனித்துப்)

என்னுடல் எனதில்லை;
தமிழ்விளை வயல்தான்!
என்னின்ற விளைவெல்லாம்
செந்தமிழ்ப் பயிர்தான்!
இன்னலும் இடர்ப்பாடும்
எனையேற்றும் 'படி'தான்!
ஏற்றமோ இறக்கமோ
எதும்வெற்றிக் கொடிதான்! —(தனித்துப்)

ஊரென்ப தெனக்கில்லை;
ஊர்யாவும் ஊர்தாம்!
உறவென்பார், 'தமிழ் காக்க
உழைப்போம்' என் பார்தாம்!
சீரென்ப தெனக்கில்லை;
செந்தமிழ்ச் சீர் தான்!
சிறப்பென்ப தெல்லாமும்
அவள்பெற்ற பேர் தான்! —(தனித்துப்)

பாராட்டு, பழிப்பெல்லாம்
பயன்கொள்வார் கருத்தாம்!
பணியாற்றி உடல் தேய்த்தல்
என்னுயிர் விருப்பாம்!
போராட்டம் அகத்தில்லை;
புறத்துண்டு; தமிழ்தான்
பொய், தாழ்வு, மடம்-யாவும்
போழும் கை வாள்தான்! —(தனித்துப்)

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–6. | தி.பி. உ௲௪. கும்பம்–விடை (மார்ச்சு–சூன் 73) | இசை 12


## அன்பும் அறிவும் - 5.

மாந்த வளர்ச்சியில் முதன் முதல் தோன்றுவது பொருள் வேறுபாட்டறிவு என்றும், அதன்பின் பொருட்பயனறிவும், அடுத்துத் தன்தேவையறிவும், அதையொட்டித தன்பொருள் உணர்வறிவும், பின்னர் காத்தலறிவும் படிப்படியாகத் தோன்றுகின்றன என்றும், அந்நிலைகளும் அவரவர் தனிநிலைக்கும், முயற்சிக்கும், இயல்பூக்கச் சூழலுக்கும் தக்கவாறு விளங்கித் தோன்றுவன என்றும், இப்படிநிலைகளி லெல்லாம் அன்பும் அறிவும் ஒத்தியங்கும் என்றும், எனவே அந்நிலைகளை இணையுணர்வுப் படிநிலை என வகுக்கலாம் என்றும் முந்தைய கட்டுரைகளில் கண்டோம். இனி அப்படிநிலைகளில் மாந்தர் வாழ்வியலின் மாறுதல்களை ஒருவாறு அறிந்து கொண்டு மேலே செல்வோம்.

மக்கள், மலைவாழ்நராய் இருந்த பொழுது குறைந்திருந்த அறிவு அவர்கள் படிப்படியாய்க் கீழிறங்கி வாழத் தொடங்குகையில் மேலும்


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

மேலும் விளக்கமுற்று வளரத் தொடங்கியது என முன்பே கண்டோம். எனவே மலைவாழ்க்கை வெறும் அன்பு வாழ்க்கையாக மட்டும் அவர்களுக்கு இருந்தது. அவர்கள் அறிவுக் கிளர்ச்சியுற்றுக் கீழிறங்கி வந்து வாழ்கையில், காத்தலறிவு தோன்றி அவர்கள் வாழ்க்கை உரிமை வாழ்க்கையாக மலர்ந்தது. மலைப்புறங்களில் தனித்தனியாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள், காட்டுப் புறங்களில் மணந்துகொண்டு குடும்பம் குடும்பமாக வாழத் தொடங்கினர். அன்பால் பிணைந்த வாழ்க்கையினராக இருந்தவர்கள், அறிவு ஓரளவு கிளரத் தொடங்கியவுடன், பிரிவுற்றுக் குழுக்குழுவாக வாழத் தொடங்குகின்றனர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இனி, பிரிவுற்ற குழு, அஃதாவது உரிமை வாழ்க்கையில் அமைத்துக் கொண்ட குடும்பம் அதன்பின் தனித்தனியாக முன்னேறத் தொடங்கியிருத்தல் வேண்டும். அதுவரை ஒருவனுக்காகத் தேடியுண்டவன், இக்கால் ஒரு குடும்பத்திற்காக—தனக்குற்ற உரிமையர்—உறவுக்காரர்களுக்காகத் தேடி உண்பிக்க வேண்டி வந்தான். உரிமையுணர்வு அவனுக்கு அடுத்த அறிவை ஊட்டுகின்றது. மலைப்புறத்து வாழ்ந்த அன்பினும் காட்டகத்தே அவன் அன்புணர்வு வளர்ந்த பின்தான் உரிமையுணர்வே மலர்ந்தது. அந்த உரிமையென்னும் வளர்ந்த அன்பு, அடுத்ததாகிய அறிவு நிலையை ஊக்குகின்றது. அக்கால் அவன் ஈட்டலறிவைப் பெறுகின்றான். அதுவரை இருப்பதைக் காத்து வந்தான்; இப்பொழுதோ இழந்து போனதை ஈட்டத்தொடங்குகிறான்.

ஈட்டலறிவு அவனுக்குத் தோன்றியவுடன், அதற்கடுத்ததாகிய கருவியறிவு அவனுள் விளங்குகின்றது. எனவே நிலத்தை விளைவிக்க முற்படுகின்றான். காட்டை யழிக்கின்றான்; கழனியைச் சமைக்கின்றான். குறிஞ்சியில் தோன்றி முல்லையில் வாழ்ந்தவன் மருதத்தில் வாழ முற்பட்ட காலம் அது. குறிஞ்சியும் முல்லையும் இயற்கை நிலங்கள்; மருதம் உருவாக்கப்பெற்ற நிலம். மாந்தனுக்குக் கருவியறிவு தோன்றி அவன் வினைபடத் தொடங்கிய காலத்துத் தோன்றியது மருதம். அவன் குறிஞ்சியில் கற்றிருந்த வேட்டுவத் தொழிலுக்குப் பிறகு அவன் கற்றுக்கொண்ட முதல் தொழில் உழவுத் தொழில்தான். அக்கால் அறிவு நிலையில் ஈட்டலறிவு

தாண்டிய கருவியறிவையும், கருவியறிவு தாண்டிய கரணியவறிவையும்; அன்பு நிலையில் உணர்வு நிலை வளர்ந்து உரிமை நிலையினையும் அவன் பற்றுகின்றான்.

குறிஞ்சி (மலை) நிலத்தின் கட்டற்ற வாழ்க்கை, முல்லையில் உரிமையொடு கட்டுப்பாடெய்தி, மருதத்தில் நன்கு மலர்ச்சியுற்றிருந்தது. இனி, மருத நிலத்தின் உழவு வாழ்க்கைதான் அவனுக்குத் தொழில் வாழ்க்கைக்கு அடிப்படையாக விருந்தது. தொழிலில்தான் கரணியவறிவு அவனுக்கு விளங்குகின்றது. விதைகளை நிலத்தில் ஊன்றினால் விளைந்து வருகின்ற தன்மை அவனுக்கு அக்கரண ஒளியைக் கொடுத்தது. இந்நிலை அவனின் பூதவியல் வளர்ச்சிக்கும் அடிப்படையாக விருந்தது.

உழவு வாழ்க்கையில் மலர்ந்த உரிமை வாழ்க்கை, அவனுக்குக் குழுவாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு படிநிலையறிவை உண்டாக்கியதில்லையா? அந்த அறிவுதான் அவனுக்கு அரசியல் வாழ்க்கைக்கும் அடிகோலியது என்னலாம். குடும்பத்தலைமையை ஏற்படுத்திக் கொண்ட அவன் குழுத்தலைமையையும், ஊர்த்தலைமையும், பின் நாட்டுத் தலைமையையும் உருவாக்கிக் கொள்ள அவனுக்கு வழிவகுத்துக் கொடுத்தது. அதன் பின்னர்தான் அவன் பரந்துபட்டு வாழத் தொடங்குகின்றான்.

தன் குடும்பத்தை விட்டுத் தொழில் கரணியமாகப் பிரிந்து போகின்ற நிலைகள் அக்கால் குமுகாய அமைப்பில் தோன்றத் தொடங்கின. மாந்தனின் கரணிய அறிவு வளர்ச்சியுறத் தொடங்கியதும், அவன்பால் பல வேற்றுமைகள் வளர மூறப்பட்டன. இந்நிலை அவன் உளளுணர்வு நிலையாகிய அன்புநிலையிலும் வேறுபாட்டைக் கற்பித்தது. தனக்கென அமைந்த குடும்ப நிலையிலும் அவன் மன வேறுபாடு புகுந்தது. தன்பால் அன்பு செலுத்தும் மனைவியைத் துறந்து அவன் உழவு வாழ்க்கையிலும் தொழில் வாழ்க்கையிலும் ஈடுபட்டதால் தனக்கு உரிமையல்லாத வேறு பெண்டிர்பாலும் அவன் தொடர்பு கொள்ளும் பரத்தமை நிலை அக்கால் தொடங்கியதுதான். எனவே குடும்ப இணைப்புகளில் பிரிவும் பிளவும் தோன்றி, அவன் அன்புணர்வுடனும் அறிவுணர்வுடனும் மோதத் தொடங்கின. கணவனுக்கும் மனைவிக்கும் ஊடல் நிகழ்ந்தது. ஊர் பெரியதாகி

# நம்பற்கரிய செய்திகள்

தொகுப்பு: புலவர். மூ. ஆறுமுகம் சாத்தனூர்.

பழந்தமிழாட்சியில் நிகழ்ந்தனவாகக் கூறப்பட்டுள்ள பல செய்திகள் இக்காலத்தார் நம்பற்கரியன. அவற்றுட் சில;-

1. கழுமலத்தில் அவிழ்த்துவிட்ட யானை கரிகாலனைத் தேடிச் சென்று கருவூரிற் கண்டு தானே தன்மீது ஏற்றிக்கொண்டு வந்தது.

2. ஊர்க்கணக்கன் ஆண்டிறுதியில் காய்ச்சிய இரும்பேந்தி கணக் கொப்புவித்தது.

3. கரிகாலன் முகரி என்னும் முக்கண்ணனின் மிகைக்கண்ணைப் படத்திலழிக்க, அந்நொடியே அம்முகரியின் கண் தானே மறைந்தது.

4. பாம்புக் குடமும் பழுக்கக் காய்ச்சிய இரும்பும் அறமன்றங் களில் தெய்வச்சான்றாக உண்மை புணர்த்தி வந்தது.

5. புகாரிலுள்ள சதுக்கட்பூதம், அறைபோகமைச்சரும் பொய்க் கரியாளரும் உள்ளிட்ட அறுவகைக் குற்றவாளிகளைப் புடைத் துண்டது.

6. வார்த்திகனை நெடுஞ்செழியன் அதிகாரிகள் சிறையிலிட்ட வுடன் மதுரைக் காளி கோயில் தானே சாத்திக்கொண்டது.

7. மூன்றும் குலோத்துங்கன் பிராமணன் ஒருவனுக்குக் கொலை யொறுத்தல் விதிக்க அவ் வொறுத்தல நிறைவேற்றப்பட்ட பின் அப் பிராமணன் ஆவி இரவும் பகலும் அரசனைத் தொடர்ந்து துன்புறுத்தி இறுதியில் திருவிடை மருதூரில் நீங்கியது.

[அடிப்படை: மொழிஞாயிறு. ஞா. தே. பாவாணர் "பழந்தமிழாட்சி"]

3-ஆம் பக்கம் (தொடர்ச்சி)

அரசுகள் அமையத் தொடங்கியதும் போர்கள் நிகழத் தொடங்கின. அதன் காரணியமாகவும் ஆண்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்து வாழத் தொடங்கினர். ஈட்டலறிவும் அது தொடங்கிய கருவி யறிவும், அதன் பின்னர் வளர்ந்த கரணியவறிவும், அவனைப் பிரிவுணர்வுப் படிநிலைக்குக் கொண்டு செலுத்தின. அக்கால் அவன் அன்பு நிலையிலும் அறிவு நிலையிலும் விரிவுற்றுப் பிரிந்து தனித்தனியே இயங்கி வாழ்கின்ற ஓர் இயற்கைப் படிநிலை தோன்றியது.

(தொடரும்)

# மூளையின் அளவற்ற திறன்!

பர். நிகோலயேவ்

சோவியத் நாட்டில் மெலிக்கெசு என்ற நகரத்தைச் சேர்ந்த பொறியியலரான யூசெஃப் புரோகோத்கோ என்பவர் எந்த எண்ணின் இரு மடங்கு, மும்மடங்குப் பெருக்கலையும் மனக்கணக்காகவே நொடிப் பொழுதில் செய்து முடிக்க முடிகிறது என்று சில நாட்களுக்கு முன்னர் தாளிகையில் செய்தி வந்திருந்தது. 10,15,20 இலக்கமுள்ள எண்களின் பெருக்குத் தொகையையும் அவர் சில விநாடிகளில் கூறி விடுகிறார் என்றும் அச் செய்தியில் காணப் பட்டிருந்தது. மாந்த மூளையின் திறனுக்கு, அதில் மறைந்திருக்கும் ஆற்றலுக்கு, இஃது ஓர் எடுத்துக்காட்டாகும்.

மூளையின் புறணிப் பகுதி 1400 கோடி நரம்புக் கண்ணறைகளைக் கொண்டது என்று அறிவியல் அடிப்படையாக நிலைநாட்டப்பட்டுள்ளது; என்றாலும் கூட அவ்வளவு நரம்புக் கண்ணறைகளும் சேர்ந்து 2அல்லது 5 பற்பதின் நுண்சீரடி (மில்லி மீட்டர்) அடுக்காகவே உள்ளது என்றால் அவை எவ்வளவு நுண்ணியவை என்பதை நாமே உய்த்துணர்ந்து கொள்ளலாம். மூளையின் வெண்மைப் பகுதிதான் அது. மூளையின் அமைப்பையும், அஃது இயங்கும் வகையையும் நன்கறிந்து, அந்த மெய்ப்பாட்டின் அடிப்படையில் மின்னணுக் கணிதமானி யொன்றை உருவாக்க அறிவியலறிஞர்கள் முற்பட்டபோது, அந்த இயந்திரத்தின் அளவு ஒரு பெரிய வீடளவுக்குச் சென்று விட்டது.

உடலின் எல்லாச் செயல்களுக்கும் ஏற்ப அவற்றை இணைத்துப் பணியாற்றுகிறது மூளை. நீங்களும், நானும் 150 ஆண்டுக் காலத் திற்கு வாழ்ந்தபோதும்கூட, மூளை அமைப்பின் அடிப்படையாகத் திகழும் நரம்பு இணைப்புகளில் பாதியைக் கூட நாம் பயன்படுத்தி யிருக்க மாட்டோம். அதனால்தான் நாம் நம்மை ஒரு குறிப்பிட்ட தொழில்துறை வரையறைக்குள் அடக்கிக் கொள்ளக்கூடாது. நமது மூளையின் பரந்து விரிந்த வியத்தகு திறனைக் கூடிய அளவு மிகுதி யாகப் பயன்படுத்த முற்பட வேண்டும்; நமது நினைவாற்றலுக்குப் பயிற்சியளித்து, கலை, விளையாட்டு, குழுகாயப்பணி ஆகிய பல வேறு துறைகளிலும் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடும்போது, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட துறையில் உங்களுக்கு 'ஓஃகோ' என்று புகழ்

வரலாம்; அல்லது வராமலும் இருக்கலாம். அப்படி வராவிடில் அது கண்டு நீங்கள் ஏமாற்றமடைவதும் சரியன்று. ஏனெனில் பல்வேறு துறைகளிலும் நீங்கள் உங்கள் ஆற்றலையும், திறனையும் வளர்த்துக் கொண்டால், நீங்கள் முதலாவதாக ஈடுபட்டுள்ள உங்கள் வேலையைச் சிறப்பாக உங்களால் ஆற்ற முடியும்.

மூளை வேலையின் நம்பகத் தன்மையும், இழப்பிற்கு ஈடு செய்யும் அதன் திறனும் நீண்ட காலமாக, அறிவியலாளர்களுக்கு விளங்காத புதிராகவே இருந்து வந்தது. புகழ் பெற்ற நுண்ணுயிரி இயலாளரான உலூர்யி பாய்ட்சருக்கு 46–ஆவது அகவையில் மூளையின் வலக் கோளத்தில் அரத்தப்பெருக்குக் கண்டது. அதிலிருந்து பண்டுவம் பெற்று மீண்ட அவர் தொடர்ந்து தமது அறிவியல் ஆராய்ச்சியை மேற்கொண்டதோடு 73 அகவை வரை வாழ்ந்தார். நோய் கண்டு குணமடைந்த பின்னர் உள்ள அவர் வாழ்வுக் காலந்தான் மிகப் பயனுள்ள காலமாக விருந்தது. அந்தக் காலக் கட்டத்தில்தான் அவர் வெறிநாய்க் கடிக்கான எதிர்ப்பு(வாக்சீன்)மருந்தைக் கண்டு பிடித்தார். அவர் இறந்த பின்னர், அவாது உடல், பிண ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அவர் இறப்பதற்கு 27 ஆண்டுகளுக்கு முன்னர் அவருக்கு ஏற்பட்ட அரத்தக் கொதிப்பு நோயின் விளைவாக, அந்த அறிஞரின் வலப் பக்க மூளை முழுவதுமே நசித்திருந்ததாகத் தெரிய வந்தது. ஆகவே, அவர் இறப்பதற்கு முன் 27 ஆண்டுக்காலமாக, மூளையின் வலப்புறம் செய்திருக்க வேண்டிய அத்தனைப் பணிகளையும் இடப்புறமே மேற்கொண்டு செய்து வந்துள்ளது என்பது புலனாயிற்று.

தனியாக எடுத்துக் கொண்டால், மூளையின் அடிப்படை அலகான நரம்புக் கண்ணறை அல்லது 'நியூரான்' என்பது, ஒரு மின்காந்த அஞ்சல் கருவியையோ, ஒரு வானொலி ஓதரையோ (வால்வையோ) அல்லது ஓர் ஒலிபரப்புக் கருவியையோ விட நம்பகத் தன்மை வாய்ந்தது அன்று என்பது உண்மைதான். ஆனால், மேற்சொன்ன தொழில் நுட்பக் கருவிகள் பழுதுபட்டு விடலாம். அதன் காரணியமாக அவற்றின் வேலை நின்றுவிடுகிறது. மூளையின் கூறுகளோ, எவையேனும் பழுதுபட்ட போதிலும்கூட, பல இலக்கம் கண்ணறைகள் சேதமடைந்த போதும்கூட நரம்பு அமைப்புகளின் முழுப் பகுதியே சிதைவடைந்த போதும்கூட, மொத்தத்தில் வேலை

செய்யும் ஆற்றலை இழப்பதில்லை. அதனால்தான் ஏதேனும் நேர்ச்சி களின் விளைவாகப் பார்வையையோ, பேச்சையோ இழந்தவர்கள் சில வேளைகளில் மீண்டும் அவற்றைப் பெற்று விடுகின்றனர்.

தங்களுக்குப் பொதுவாக உள்ள வேலைகளைக் காட்டிலும், பெருமளவு மிகுதியான வேலை செய்யும் ஆற்றல் நரம்புக் கூடல் நிலையங்களுக்கு உண்டு. எடுத்துக்காட்டாக நெஞ்சாங்குலை வேலையைக் கட்டுபபடுத்தும மூளையின் பகுதி, மெல்ல மெல்ல உறுப்புகளின் இயக்கத்தையும் கட்டுப்படுத்தத் தொடங்கலாம்; அதே போன்று பிற உறுப்புகளைக் கட்டுப்படுத்தும் மூளையின் நிலையம் நெஞ்சாங்குலை, இரைப்பை ஆகியவற்றின் இயக்கத்தைக் கட்டுப் படுத்தவும் கூடும்.

வற்றாத ஆற்றல் நிறைந்த மாந்த மூளை உண்மையிலேயே ஒரு வியத்தகு பொருளாகும்.

# இரேக்க அகர வரிசை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Alpha | ஆல்பா | A. | Mu | மு | M. |
| Beta | பீட்டா | B. | Nu | நு | N. |
| Gamma | காமா | C, G. | Xi | எக்சி | — |
| Delta | டெல்டா | D. | Omicron | ஒமிகுரோன் | O. |
| Epsilon | எப்சிலோன் | E. | Pi | பை | P. |
| Digamma | டிகாமா | F. | Koppa | கொப்பா | Q. |
| Upsilon | உப்சிலோன் | V,U,Y,W. | Rho | ரோ | R. |
| Zeta | செட்டா | Z. | Sigma | சிக்மா | S. |
| Eta | எட்டா | H. | Tau | தாவ் | T. |
| Theta | தீட்டா | — | Phi | பி | — |
| Iota | ஐயோட்டா | I, J. | Chi | சி | X |
| Kappa | கப்பா | K. | Psi | பிசி | — |
| Lambda | லம்டா | L. | Omega | ஒமேகா | — |

## தமிழ்ச்சிட்டு. கடலூர்.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 3-00 | 4-50 | 6-00 |
| தனியிதழ் ,, | 0-25 | 0-35 | 0-50 |

# முத்துமொழிகள்

- எதையும் எளியது என்று எண்ணிவிடாதே! அவ்வாறு கருதினால் நீயே எளியவனாகி விடுவாய்!
—அமெரிக்கப் பழமொழி
- வாழ்க்கை என்பது ஓர் எதிரொலி. பொய்யோ, உண்மையோ, நல்லதோ, கெட்டதோ எதை நீங்கள் எறிகிறீர்களோ அதுதான் திரும்பக் கிடைக்கும். சிறந்தவை திரும்பக் கிடைக்க வேண்டுமெனில் சிறந்தவற்றையே உலகத்திற்குக் கொடுங்கள் —யாரோ
- உண்மைக்காக எதையும் இழக்க அணியமாக இரு. ஆனால் எதற்காகவும் உண்மையை இழக்காதே —காந்தியடிகள்
- சிறு செலவுகளைச் செய்யாமல் கவனம் செலுத்து. ஏனெனில் சிறிய ஓட்டைகள்தாம் பெரிய கப்பல்களும் அழியக் காரணியமாயிருக்கின்றன —பிராங்ளின்
- கால்தடுமாறினால் சமாளித்துக் கொண்டு நிற்கலாம். ஆனால் நாக்குத் தவறினால் மீளவே முடியாது.
—பெஞ்சமின் பிராங்ளின்
- வலுவற்றவர்களின் பாதையில் தடையாக இருக்கும் கற்பாறைகள், வலுவுள்ளவர்களின் பாதையில் படிக்கட்டுகளாக அமைகின்றன. —கார்லைல்

தொகுப்பு: கோ. இளங்கதிர்-மதுரை-1


- மாந்தரில் சிறந்தவன் பிறரை மகிழ்வடையச் செய்கிறவன். நண்பர்களில் சிறந்தவன் நன்மை வழிகளை உனக்குக் காண்பிப்பவன். —அரபுமொழி.
- பேச்சாளர்கள் சிறந்த செயலாளர்களாக இருப்பது இல்லை.
—செகப்பிரியர்.
- விளங்கிக் கொள்ளாத போதும் பொறுமைப் படும்போதும் ஒருவன் மற்றவனை முட்டாளாகக் கருதிவிடுகிறான். —அமரன்.
- வாழ்வு குறுகியது. உலகின் வீண்பெருமைகள் யாவும் விரைவில் சென்று மறைபவை. ஆனால் பிறருக்காக வாழ்பவன் என்றும் நிலைத்து வாழ்கிறான். மற்ற அனைவரும் உயிர் இருந்தும் இறந்தவரே. —விவேகாநந்தர்.
- மாந்தர்கள் புகழ்வதும் விரைவு. இதழ்வதும் விரைவு. ஆதலால், மற்றையோர் உன்னைப்பற்றிச் சொல்லும் சொற்களைக் கவனிக்காதே. —இராமகிருட்டிணர்.
- உடன்பிறந்தவன் இன்றி உயிர் வாழலாம். ஆனால் நண்பன் இல்லாமல் உயிர் வாழ முடியாது. —செருமன் பழமொழி

தொகுப்பு: இரா. கதிர்மதி, நடாமங்கலம்.

தொடர்: 12

# பிழையில்லாமல் எழுதப் பழகுங்கள்!

பேரா. மு. வை. அரவிந்தன் கீ. க. மு.



## 17. நிறுத்தற் குறிகள்

விக்டர்யூகோ என்னும் பிரஞ்சு புதின ஆசிரியர் தாம் எழுதிய புதிய கதை நூல் எவ்வாறு விற்பனையாகிறது என்று அறிய ஆவல் கொண்டார். அந் நூலை வெளியிட்ட பதிப்பகத்தாருக்கு எழுதிய கடிதத்தில் கேள்விக்குறி (?) ஒன்றைமட்டும் எழுதி அனுப்பினர். 'புதிய நூல் எவ்வாறு விற்பனையாகிறது?' என்ற பொருள்பட அவ்வாறு செய்தார். அக் கடிதத்தைக் கண்ட பதிப்பகத்தார், வியப்புக் குறி(!) ஒன்றைக் கடிதத்தில் எழுதி விடை அனுப்பினர். 'வியப்பு அடையும் வகையில் மிகுதியாக விற்பனையாகிறது' என்பது அக் கடிதத்தின் பொருள்: கடிதத்தைப் புரிந்து கொண்ட கதையாசிரியர் பெருமகிழ்ச்சி யடைந்தார்.

நிறுத்தற் குறிகள் ஒருவர் கருத்தைத் தெளிவாக விளக்கும் என்பதற்கு இந்நிகழ்ச்சி சிறந்த சான்ருக உள்ளது. சொற்ருெடரின் பொருளை அறியவும் நிறுத்தற் குறிகள் தேவையாகும். அவன் நல்லவன்! — என்பது வியப்பையும், அவன் நல்லவன்?—என்பது விஞவையும் உணர்த்தும். அவன் நல்லவன். — என்பது அவன் நல்லவனே என்று தெளிவுபடுத்துகின்றது.

ஔவையார் பாடியுள்ள செய்யுளை (நல்வழி–15)

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம்! ஒருநாளும் இல்லை உபாயம்!

என்று குறியிட்டால் பொருளே வேறுபடும்.

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை! உபாயம்,

என்று குறியிட்டால் பொருள் சிறப்படைகின்றது. சொல்லியத்தின் பொருளை அறிய இத்தகைய நிறுத்தற் குறிகள் தேவையாகும்.

தேவையற்ற இடங்களில் நிறுத்தற்குறியை இடுவதும் கூடாது. ஏன்? என்ருல், இல்லையோ? என்ருல், எவ்வாறு? என்ருல்–என்று எழுதுவது தவறு. இவற்றின் இடையேயுள்ள விஞக் குறியை நீக்கி விட்டு ஏனென்ருல், இல்லையோ என்ருல், எவ்வாறு என்ருல் என்று எழுத வேண்டும்.

'எவ்வளவு சிறந்தது! என்பதை நான் கூறவேண்டியதில்லை.' 'தங்கள் விருப்பம் என்ன? என்பதை அறிவிக்கவும்' 'தங்கள் விருப்பம் எதுவோ? அதைச் செய்யவும்' - என்னும் சொற்றொடர் களின் இடையே வரும் வியப்புக்குறியும் வினாக்குறியும் தேவை யற்றவை.

கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக?
பின்வருவனவற்றை விளக்குக?

என்பவற்றின் இறுதியில் உள்ள வினாக்குறிகள் வேண்டாதவை.

"பல நூல்களைக் கற்றுத், தெளிந்தவர் இவர்" என்று எழுதுவது கூடாது. இதில் 'கற்றுத், தெளிந்தவர்' என்பதில் கற்று என் பதத்துப்பின் மெய் எழுத்தை மட்டும் சேர்க்க வேண்டும் அல்லது நிறுத்தற் குறியை மட்டும் இட வேண்டும்.

கற்றுத் தெளிந்தவர்
கற்று, தெளிந்தவர்

என்று ஏதேனும் ஒருவகையாய் எழுத வேண்டும்.

பிறர் உரையாடலைக் குறிக்க இரட்டை மேற்கோள் ["........."] குறியும், உரையாடலுக்குள் இடம்பெறும் மற்றோர் உரையாடலைக் குறிக்க ஒற்றை மேற்கோள் குறியும் ['..............'] இடுவது வழக்கம்.

தேவையான இடங்களில் நிறுத்தற் குறிகளை இட்டு எழுதினால் கற்பவர் சிறிதும் இடர்ப்படாமல் விரைவாய்க் கற்பர். மிகத் தெளிவாகப் பொருளும் புலப்படும். திரு. வி. க. அவர்கள், ஞானியார் பேச்சுத் திறனைப் புகழ்ந்துள்ள பகுதி இது:

சுவாமிகளின் பேச்சுத் திறனை எதற்கு ஒப்பிடுவது கடல் மடைத் திறப்புக்கா வெண்கலக் கோட்டையில் அரசுவா புகுதலுக்கா பெரும் புயலுக்கா ஓயா மழைக்கா எதற்கு எதற்கு ஒப்பிடுவது பலர் பலவாறு கூறுப

இப்பகுதியில் எந்தக் குறியீடும் இல்லை! ஆதலின் விரைவாய்ப் படிக்க இயலவில்லை. பொருள் தெளிவும் ஏற்படவில்லை. இதே பகுதியை நிறுத்தற் குறிகளை இட்டுக் காண்போம்:

"சுவாமிகளின் பேச்சுத் திறனை எதற்கு ஒப்பிடுவது? கடல் மடைத் திறப்புக்கா? வெண்கலக் கோட்டையில் அரசுவா புகுதலுக்கா? பெரும் புயலுக்கா? ஓயா மழைக்கா? எதற்கு — எதற்கு ஒப்பிடுவது? பலர் பலவாறு கூறுப."

நிறுத்தற் குறிகள் அமைந்தபின் இப்பகுதியை விரைவாய்ப் படிக்க முடிகின்றது; பொருள் தெளிவும் ஏற்படுகின்றது. நிறுத்தற் குறிகளை அறிந்து, தேவையான இடங்களில் அமைக்க வல்லவரே சிறந்த உரைநடை ஆசிரியராக விளங்க முடியும். (முற்றும்)

# சில விழுமிய மாற்றங்கள்

—நா. எழில்-மகிழ்நன்.

### ஊர்ப் பெயர் மாற்றம்.

அவிநாசி—புக்கொளியூர்
ஆத்தூர்—ஆற்றூர்
இராமநாதபுரம்—முகவை.
ஊட்டி(உதகமண்டலம்)— ஒற்றைக்கல் மந்தை.
ஒரிசா—ஒட்டரம்.
கட்டாக்—கடகம்.
கபித்தலம்—குரங்காடு துறை.
கல்கத்தா—காளிக் கோட்டம்.
குடியாத்தம்—குடியேற்றம்.
கும்பகோணம்—குடந்தை,
குஜராத்—குச்சரம். [குடமூக்கு.
கேரளம்—சேரலம்.
கோலார்—குவளாலபுரம்.
சம்புகேசுவரம்—திருவானைக்கா.
சிங்கப்பூர்—சிங்கபுரம்.
சிதம்பரம்—சிற்றம்பலம், தில்லை.
தர்மபுரி—தகடூர்.
தாமிரபரணி—பொருநை.
நீலகிரி—நீலமலை.
நூபுரகங்கை—சிலம்பாறு.
பம்பாய்—வேம்பாய்.
பர்மா—காழகம்.
பழநி—பொதுநி.
பாடலிபுரம்—பாதிரிபுரம்.
பெங்களூர்—வெங்காளூர்.
பொள்ளாச்சி—பொழில் வாய்ச்சி.
மத்தியப்பிரதேசம்—நடுவண்ணைதிரம்.
மாயூரம்—மயிலாடுதுறை.
மைசூர்—எருமையூர்.
லால்குடி—திருத்தவத்துறை.
விருத்தாசலம்—முதுகுன்றம், பழமலை.
வேதாரணியம்—மறைக்காடு, மரைக்காடு
வைத்தீஸ்வரன் கோவில்— வினைதீர்த்தான் கோவில்.
ஸ்ரீரங்கம்—திருவரங்கம்.

### மாந்தன் பெயர் மாற்றம்.

இரணியன்—பொன்னன்.
ஈசுவரன்—உடையான்.
கங்காதரன்—கங்கையணிந்தோன்.
கலியாணசுந்தரன்—மணவழகன்.
குஞ்சிதபாதம்—தூக்கிய திருவடியன்.
கோபாலன்—கோவலன்.
சகதீசுவரன்—உலகுடையான்.
சகநாதன்—உலகநம்பி.
சண்முகன்—ஆறுமுகன்.
சந்திரசேகரன்—பிறைசூடி.
சாம்பசிவன் |
சாம்பமூர்த்தி | —அம்மையப்பன்.
சுந்தரன்—சொக்கன்.
சேஷசாயி—அரவணையன்.
சோமசுந்தரன்—மதியழகன்.
தட்சிணாமூர்த்தி—தென்முக நம்பி.
நடராசன்—நடவரசன்.
நாராயணன்—நரன்மகன்.
நீலகண்டன் | மணி மிடற்றோன்,
| கறை மிடற்றோன்
பக்தவச்சலன்—அடியார்க்கு நல்லான்.
பஞ்சாட்சரன்—ஐந்தெழுத்தன்.
பரஞ்சோதி—பரஞ்சுடர்.
பிச்சாடனன்—இரப்பெடுத்தோன்.
பிருகதீசுவரன் | பெருவுடையான்.
மகேசுவரன் |
மகாதேவன்—பெருந்தேவன்.
மார்க்கசகாயன்—வழித்துணையான்.
ரங்கநாதன்—அரசநம்பி.
வன்மீக நாதன்—புற்றிடங்கொண்டான்.
ஹரிஹரன்—அரியரன்.

(பாவாணர் நூல்களிலிருந்து தொகுத்தவை)

# உலகிற்கும் மாந்த உடலுக்கும் உள்ள உறவு

**வி. செவத்தியாஞேவ்**
*[விண்வெளி வலவர்]*

*உலகுடன் நமது உடலுக்குள்ள உறவு எத்தகையது என்பதை விண்வெளிக்குச் சென்ருல்தான் உணர முடிகிறது. தனக்கேற்பட்ட பட்டறிவுகளைச் சுவைபடக் கூறுகிருர், சோவியத் விண்வெளி வலவரான வி. செவத்தியாஞேவ்.*

நமக்கு வாழ்வு தந்துள்ள இம்மண்ணுலகம் நம்மை அதனுடன் இறுகப் பிணைத்து உள்ளது. அப்பிணைப்புகளை நாம் பெரும்பாலும் உணர்வு முழுமையாக உணர்வதில்லை. உலகின் ஈர்ப்பு விசை நம்மை அதனுடன் பல வழிகளிலும் பிணைத்துள்ளது என்பதை நாம் உணர்ந்து பார்க்கிருேமா? பரந்து விரிந்ததொரு காற்று மண்டலக் கடலின் அடித்தளத்தில் நாம் வாழ்ந்து வருகிருேம் என்பதையும், நமது தோள்களின் மீது அரைக்கல் எடையுள்ள காற்று அழுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் உணர்ந்து பார்த்ததுண்டா?

மாந்தன் விண்வெளியை நோக்கிச் செல்லும் போது, உலகின் ஈர்ப்பு விசையை எதிர்த்துச் செல்கிருன். உலகின் விசையிலிருந்து முற்றிலும் விடுபட்டு, எடையிலா நிலையை அடைகிருன். விண்வெளிக் கப்பலில், உலகிலிருப்பதைப் போன்ற அத்தனை ஏந்துகளையும் அவன் ஏற்படுத்திக் கொள்ள முடியும். ஆனுல் உலகின் ஈர்ப்பு விசையை மட்டும் அவன் அங்கே கொணர முடியாது. அப்பொழுதுதான், அவனுக்கு இந்த உலகுடன் உள்ள உறவும், பிணைப்பும் நன்கு புலனுகின்றன.

அத்தகைய பிணைப்புகளை இழந்த ஒரு மாந்தனுக்கு, அந்த அண்ட வெளியில் என்ன நேர்கிறது? உலகின் ஈர்ப்பு விசையிலிருந்து விடுபட்டு, நீண்ட காலம் எடையிலா நிலையில் வாழும் மாந்தனை அந் நிலை எவ்வாறு தாக்குகிறது?

எடையிலா நிலை ஏற்பட்டவுடன் அது மனத்திற்கு ஒருவகை மகிழ்ச்சியைத் தருகிறது. ஈர்ப்பு விசையை எதிர்த்து விண்கலத்தைச் செலுத்துவதில் உள்ள தொல்லைகள் முடிவடைந்து விடுகின்றன; ஏதுமற்ற பாழ்வெளியில் நமது உலகம் மட்டுமே தெளிவாக ஒரு பந்து

போன்று நம்முன் தோன்றும் காட்சியுடன் அந்த எடையிலா நிலை தொடர்புடையதாக இருப்பதால், ஒருவகை இன்பம் ஏற்படுகிறது. ஆனால், விண்கலத்தில் உள்ள எத்தனையோ விசை அமைப்புகளின் மீது கவனம் செலுத்த வேண்டியிருப்பதால், விண்வெளி வீரருக்கு, உணர்ச்சி வசப்பட்டு, அந்த உணர்ச்சிகளை அலசி ஆராய்வதற்கு நேரமிருப்பதில்லை.

தொடக்கத்தில் மாந்தன் எடையிலா நிலைக்கு விரைவில் தன்னைத் தக அமைத்துக் கொள்கிறான். எடையிலா நிலைக்கு ஏற்றாற் போல, அவனுடைய எல்லா மண்டலங்களுமே ஒரு புதிய ஒழுங்கு முறையைத் தானாகவே கடைப்பிடிக்கத் தொடங்குகிறது. நெஞ்சத் துடிப்பு சற்றுக் குறைகிறது. செரிமான மண்டலம், பிற மண்டலங் களின் செயல்முறை வேறுபடுகின்றது. அந்த மாற்றங்களை யெல்லாம் மாந்தன் உணர்கிறான்; ஓரிரு நாள்களில் அவை அவனுக்குப் பழக்கமாகிப் போய் விடுகின்றன.

மாந்தனுக்கு அவனது நிலையை—அஃதாவது உலகின் ஈர்ப்பு விசையையொட்டி அவன் இருக்கும் நிலையை—அறிவிப்பதற்கான உறுப்பு, காதினுள் இருக்கும் அரை வட்டக் குல்லியங்கள் என்பதை அனைவரும் அறிவர். (அஃதாவது, மாந்தனின் கண்களை இறுகக் கட்டி விட்டு, அவனைத் தலைகீழாகவோ அல்லது கிடைமட்ட மாகவோ எப்படித் திருப்பினாலும், உடல் எந்நிலையிலிருக்கிறது என்பதை அவன் தெரிந்து கொள்ள முடியும். அதை அறிவிக்கும் உறுப்புகளே அரை வட்டக் குல்லியங்கள்; அவை ஈர்ப்பு விசையைப் பொறுத்தே இயங்கக்கூடியவை). எடையிலா நிலையில் அந்த உறுப்புகள் முற்றிலும் செயல்படாமையால் நாமிருக்கும் நிலையைப் பார்வையின் மூலமாகவே நாம் உணர வேண்டியிருக்கிறது. விண் வெளிக்கப்பலில், மாந்தன் கண்களை மூடிக் கொண்டால், அவன் நேராக நிற்கிறானா, கிடைமட்டமாக இருக்கிறானா, அல்லது தலைகீழாக இருக்கிறானா என்பதை அவன் கண்டுகொள்ள முடியாது. எனினும், எடையிலா நிலையில் அவன் நீண்ட நாள்கள் தங்கும் பொழுது, அவனின் பிற உணர்வுகள் கூர்மையடைந்து, அவனால் இருட்டிலும் கூட செயல்பட முடிகிறது.

எடையிலா நிலையில் அவன் இயக்கங்கள் அனைத்தும் புதிய முறையில் அமைகின்றன. அஃதாவது, அவனைத் தளத்துடன் பிணைக்கும் ஈர்ப்பு விசை ஏதும் இல்லாததால், அவன் எப்பொழுதுமே

ஒரு மிதக்கும் நிலையிலிருக்கிறான். குறைந்த ஆற்றலைச் செலவிட்டாலே, எளிய ஒரு சிறு முயற்சியுடன் அவன் ஓரிடத்தில் இருந்து மற்றொரிடத்திற்குச் சென்றுவிட முடியும். தொடக்கத்தில் இந்த இயக்கம், ஓர் ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டிராது. ஆனால், விரைவில் அவன் தானாகவே அதைக் கற்றுக் கொள்கிறான்.

நரம்பு, தசை, உளம் இவற்றின் மிகக் குறைந்த அளவான ஆற்றலைச் செலவிட்டுப் பல்வேறு ஆய்வுகளையும் செய்வது அவனுக்குப் பழக்கமாகி விடுகிறது. சிறப்பாக இந்தச் சூழ்நிலையில் பணி செய்து கொண்டு, ஓய்வும் எடுத்துக்கொள்ள, மிகச்சிறப்பான மன அமைதியுடன் இருப்பது மிகவும் முகாமையானதாகும்.

விண்வெளிச் செலவின் பொழுது நிலத்திலிருப்பதைப் போல, இயல்பாகப் பகலும், இரவும் மாறி மாறி வருவதில்லை. தொடர்ந்து சில நாள்களாக, விண்கலன் சூரிய ஒளியிலேயே இருக்கக்கூடும்; அஃதாவது, இரவுப் பொழுதே வருவதில்லை. விண்வெளி வலவன் தனது கைக்கடிகாரத்தைக் கொண்டே வாழ்க்கை முறைமையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

மாந்தன் அத்தகைய சூழ்நிலையில் தனது பணிசெய்யும் ஆற்றலை இழக்காமல், எவ்வளவு காலம் தொடர்ந்து இருக்க முடியும் என்பதைக் கண்டுபிடிப்பதற்காகவே சோயூசு-9, சோயூசு-11 செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றிலிருந்து, மாந்தன் சில கிழமைகள் அத்தகைய நிலையில் வாழ முடியும் என்பது தெரிய வந்தது.

எடையிலா நிலைக்கு மாந்தன் தன்னைத் தக அமைத்துக் கொண்ட பின்னர் புதிய விண்வெளிச் சூழலுடன் அவனுடைய உறவுகள் மேன்மேலும் வலுப்பட்டு வருகின்றன. அஃதாவது, புதிய நிலைமைகளுக்குகேற்ப, அவனது உடல், உளச் செயற்பாடுகள் அமைகின்றன. அப்பொழுது அவன் உலகிற்குத் திரும்பினால், உலகின் ஈர்ப்பு விசைச் சூழ்நிலைக்கேற்ப, மீண்டும் அவனுடைய செயற்பாடுகள் அமைய, சில காலம் பிடிக்கிறது. விண்வெளி நிலைக்கேற்ப உறுப்புகள் தக அமைவதற்குப் பிடிக்கும் காலத்தைவிட, மீண்டும் உலக நிலைக்கேற்ப மாறுவதற்கு மிகுந்த காலம் பிடிக்கிறது.

எடையிலா நிலையில், எல்லாப் பொருள்களுமே மிதக்கும் நிலையில் உள்ளன. அஃதாவது, எதையேனும் ஒரு பொருளைக் கையிலெடுத்தால், அதை வைப்பதற்கு ஒரு இடம் தேட வேண்டாம். அப்

படியே விட்டு விடலாம். பொருள்களைக் கட்டிப் போடாவிடில், அவை அப்படியே மிதந்து போய்விடும்! பொருள்களுக்கு எடையேதும் இல்லாததால், அவற்றைக் கையில் எடுப்பதற்கு.....அவை எவ்வளவு பெரியனவாக இருந்தாலும்......குறைந்த அளவு ஆற்றலைச் செல விட்டால் போதுமானது.

சோயூசு-9 விண்கப்பலிலிருந்து திரும்பியவுடன், முதல் சில நிமையங்களில் நான் என் தலையிலிருந்து தொப்பியைக் கழற்றிக் கீழே போட்டு விட்டேன். இயல்பல்லாத எடையுடன் அஃது இருப்பதாக எனக்குத் தோன்றியது. விண்வெளி நிலையில், எந்தப் பொருளுக்குமே எடையில்லாததால், தசைகள் குறைந்த ஆற்றலையே செலவிட்டு வந்தன; உலகத்துக்குத் திரும்பிய முதல் சில நாள்களில் அடிக்கடி நான் பல பொருள்களையும் கீழே போட்டுக் கொண்டிருந்தேன்.

விண்கப்பலிலிருந்து இறங்கியவுடன், நடந்து செல்வது எப்படி என்பதையே நான் மறந்து விட்டேனோ என்று எண்ணினேன். காலைத் தூக்கி வைப்பதற்கே பெருந் தொல்லைப்பட்டேன். தசைகளின் இயக்கம், பெரிதும் தாக்கப்பட்டது. விரைவில் களைப்படைந்து விடுவேன். விண்வெளியிலும் கூட நாங்கள் உடற்பயிற்சி செய்து வந்தோம் என்றாலும், மீண்டும் தசைகள் ஓர் ஒழுங்கிற்கு வர, சில காலம் பிடித்தது.

நீண்ட காலம் எடையிலா நிலையில் இருக்கும் பொழுது, நம் உள்ளுறுப்புக்களெல்லாம் மிதந்து கொண்டிருப்பது போன்றதோர் உணர்வு ஏற்படுகிறது. உறுப்புகளைப் பிணைத்துள்ள தசைகள் வலுவிழந்து விடுகின்றன. எனவே, உலகிற்குத் திரும்பியவுடன், உள்ளுறுப்புகளே என்னை அழுத்துவது போன்றதோர் உணர்வு எனக்கிருந்தது. மேலும், எடையிலா நிலையில், மிதக்கும் நிலையிலேயே நாம் உறங்குகிறோம்; படுக்கையை நாம் நமது உடலால் உணர்வதில்லை. உலகுக்குத் திரும்பியவுடன் கட்டிலில் படுத்தால், ஏதோ கடினமான தொன்றின் மீது உடல் கிடப்பதாக ஓர் உணர்வு ஏற்பட்டது. தவிர, இலேசான ஓர் உந்துதலில் விண்கப்பலில் எங்கு வேண்டுமானாலும் சென்று விடலாம். நிலத்திற்குத் திரும்பியவுடன், என் இயக்கம் முழுமையுமே கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டது. மற்றொன்று, விண்வெளியில் பல நாள்களாக இருக்கும் பொழுது, நமது செவியில் விழும் ஓசையெல்லாம கடிகார ஒலியும், மின்விசிறி சுழலும் ஓசையும், குளிர்பதனப் பெட்டியின் மெல்லிய ஓலமும்தான். பல நாள்கள் இவ்வாறு பழகிவிட்டு, நிலத்திற்குத் திரும்பினால் பல்வேறு ஓசை காதைக் குடைவது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. மாந்தன் இந்த நிலத்தின் மகன்; உலகின் உறவுதான் அவனை எத்துணைப் பிணைத்துள்ளது! பல நாள்கள் விண்வெளியில் சுற்றிவரும் பொழுதுதான் மாந்தன் இந்த மண்ணகத்துடன் தனக்கிருக்கும் பிணைப்புகளுக்காக ஏங்குகிறான்! O

# திருமணத் தமிழ்ச் சொற்கள்.

| வேற்றுச்சொல்—தமிழ்ச்சொல் | வேற்றுச்சொல்—தமிழ்ச்சொல் |
|---|---|

விவாகம்—திருமணம், மன்றல்
பாணிக்கிரஹணம்—கைப்பற்றுதல்
சுபமுஹூர்த்தம்—நல்முழுத்தம்
சுபதினம்—நன்னாள்
தேதி—பக்கல்
வாரம்—கிழமை
புதன்—அறிவன்
சனி—காரி
நக்ஷத்திரம்—விண்மீன்
லக்கினம்—ஓரை
ஸ்ரீ(மதி)—திரு(வாட்டி)
குமாரன்—குமரன், மகன்
குமா(ரத்தி)ரி—குமரி, மகள்
ஜேஷ்ட—மூத்த
கனிஷ்ட—இளைய
சௌபாக்யவதி—செல்வி
சௌ-Sow—பெண்பன்றீ
சிரஞ்சீவி—நீடுவாழி
புருஷன்—கணவன்
சம்ஸாரம்—மனைவி
தம்பதிகள்—மணமக்கள், காதலர்
சகோதரர்—உடன்பிறந்தார்
பௌத்தி(ரி)ரன்—பெய(ர்த்தி)ரன்
மித்திரர்—கேண்மை, நட்பு
பந்துக்கள்—உறவினர்
சந்ததி—மரபு
பரம்பரை—தலைமுறை
இஷ்டம்—விருப்பம்
ஸ்வீகாரம்—வளர்ப்பு
புத்ரபாக்கியம்—மக்கட்பேறு
மங்களஸ்நானம்—மங்கலநீராட்டு
தீர்த்தம்—தூநீர்
அனுக்ரகம்—அருள்
ஸ்தலம்—திருவூர்
தாம்பூலம்—வெற்றிலைப்பாக்கு, பாகடை
கன்னிகாதானம்—மகட்கொடை
மாங்கல்யம்—தாலி
மாங்கல்ய தாரணம் | மங்கலநாண் அணிவித்தல், திருப்பூட்டுதல்
அட்சதை—மங்கலவரிசி
கங்கணம்—காப்பு
ஹோமம்—அழலோம்பல்
யாகம்—வேள்வி
தியாகம்—ஈகம்
வாத்தியம்—இயம்
சூரிய உதையாதி—கதிரெழுநாழி
(லேட்)—மறைந்த, அமரர்
ஜோஸ்யம்—கணியம்
ஜோஸ்யர்—கணியர்
நிச்சயம்—உறுதி
ஆசீர்வாதம்—வாழ்த்து
நமஸ்காரம்—வணக்கம்
பத்திரி(க்)கை—(தாளிகை), இதழ், அழைப்பிதழ்
வருஷம்—யா(ஆ)ண்டு
மாஸம்—மாதம், திங்கள்
சித்திரை—மேழம்
வைகாசி—விடை
ஆனி—ஆடவை
ஆடி—கடகம்
ஆவணி—மடங்கல்
புரட்டாசி—கன்னி
ஐப்பசி—துலை
கார்த்திகை—நளி
மார்கழி—சிலை
தை—சுறவம்
மாசி—கும்பம்
பங்குனி—மீனம்

தொகுப்பு: கதிர். சுப்பையன்,
ஆசிரியர், நகராட்சிப்பள்ளி, குடந்தை

# தமிழ்ச் சொல் வளம்

**யாப்பு வகை:**

யாப்பு-சொற்களைப் பாவாக இசைத்தல் (Metrical Composition);
செய்யுள்-அடி வரையறுத்த மொழிநடை (Poetry);
பா-செய்யுள் வகை (Poetic Metre);
பாவினம்-இலக்கணம் நிரம்பாத பா;
நூற்பா-இலக்கணம் கூறும் சூத்திரம்;
பாட்டு-பாடப்படும் தனிச்செய்யுள், இசைப் (Poem, Song);
கீர்த்தனை-கடவுளின் கீர்த்தியைக் கூறும் இசைப்பாட்டு (Lyric);
பண்ணத்தி-நாடோடிப் பாட்டு;
தேவபாணி-தெய்வத்தை வழுத்தும் செய்யுட்பா;
பண்-இராகம்; பாண்-இசைத்தொழில்

**சான்று வகை:**

ஆவணம்-பத்திரம் (Record);
சான்று-ஆதாரம் (Evidence) கரி-Witness.

**புகழ் வகை:**

ஒளி-நன் மதிப்பு
பெயர்-அல்லது பேர்-நல்லவழியிலும் தீய வழியிலும் பரவும் பேர்;
இசை-புலவர் பாடுவதால் உண்டாகும் புகழ்;
புகழ்-இறந்த பின்னும் வழங்கும் உயர்த்துரை;
சீர்த்தி-அல்லது கீர்த்தி-மிகுபுகழ்

**செருப்பு வகை:**

மிதியடி-ஒரே யடியுள்ளது;
தொடுதோல்-இடையன் செருப்புப் போலக் குதிங்காற்கும் புறங்காற்கும் வார்பூட்டியது;
சப்பாத்து-அகன்ற அடியுள்ளது;-சோடு-திரண்ட அடியுள்ளது;
செருப்பு அளவான அகலமும் திரட்சியும் உடையது;
குறடு-கட்டையாற் செய்தது.

[பாவாணர்-சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்]

தொடர்: 7.

# கிறித்துவப் பெயர்களுக் கேற்ற தமிழ்ப் பெயர்கள்.

ஆடவர் பெயர்த் தொடர்ச்சி:

| கிறித்துவப் பெயர். | எந்த மொழி. | அதன் பொருள். | அதற்கேற்ற தமிழ்ப்பெயர். |
|---|---|---|---|
| எலியா (சு) Elias எலியட் Elliot எல்லிசு Ellis | ஈபுரு. | தலைவன். இறைவன். | நயவன், தனிமுதல்வன். |
| எல்மர் Elmer | சாக்சானியம். | பெருந்தகைவன் புகழ்மிக்கவன். | பெருந்தகை புகழோன், இசைவன். |
| எல்மோ Elmo | கிரேக்கம். | நண்பன். | நள்ளி. |
| எல்வின் Elvin | துயுத்தானியம். | அனைவர்க்கும் அன்பன். | அன்பனார். |
| எமில் Emil | ,, | தொழிலார்வம் -மிக்கவன். | கம்மியனார், வினையனார். |
| எம்மானுவல் Emmanuel | ஈபுரு. | கடவுள் நம் முடனுளார். | இறையுறைநன். கடவுணெஞ்சன். |
| எர்னஃச்டு Ernest. | துயுத்தானியம் | உண்மை; தேவை. | மெய்யன். வேட்டன். |
| எர்சுகின் Erskine | கெல்திக். | (உறுதியான பொருளில்லை) | இறையன். |
| எர்வின், Erwin, இர்வின் Irvin. | சாக்சானியம். | கடல் நண்பன். | துறைவன். நெய்தலன். புனலன். |
| எசுமாண்டு Esmond | ,, | கண்ணியக்காவன். | புரவலன், புரக்குநன் |
| எசுரா Ezra | ஈபுரு | உதவுநன். | துணைவன். உதவியன். |